1. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 – ல் நாகராஜாகோவில் தார் தளம் அமைக்கும் பணிக்கு 22.01.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு,றி.மத்தியாஸ்
   (.– ) 0.25 % மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.வி.ஐயப்பக்குமார்
   (+) 0.74 % மதிப்பீட்டைவிட கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.றி.மத்தியாஸ் (.– ) 0.25 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி தேதி 12.01.2010 – ல் ரூ.3,60,000/– ற்கு அனுமதி வழஙகியதற்கும், நாகராஜாகோவில் தேர்த்திருவிழா 30.01.2010 – ம் தேதியன்று நடைபெறுவதை முன்னிட்டு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ம.எண்.283/2009–2010

**தீர்மான எண் : 798 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி.இராமசாமி ஐயர், நினைவு பூஙகாவில் ஆழ்துளை கிணறு அமைத்து 5 HP மின் மோட்டார் பொருத்தவும் புல் வெளி அமைத்திடவும் கடந்த 31.12.2009 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.றி.நேசமணி, மதிப்பீட்டைவிட 22.65 % கூடுதல்
2. திரு.றி.வீரமணி , மதிப்பீட்டைவிட 0.66% குறைவு

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. நகர்மன்ற தீர்மானம் எண்.544 நாள் 30.10.2009 – ல் செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.66 % திரு.றி.வீரமணி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.249/2009–2010

**தீர்மான எண் : 799 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்குட்பட்ட சாலைகளான அவ்வை சண்முகம் சாலை, வடசேரி பேரூந்து நிலைய சாலை, டிஸ்டில்லரி ரோடு, WCC காலேஜ் ரோடு ( வெட்டூர்ணிமடம் சந்திப்பு வரை ) SP ஆபீஸ் ரோடு, கோர்ட்ரோடு, கேப்தெரு மற்றும் வெட்டூர்ணிமடம் முதல் பால் பண்ணை ரோடு இவைகளில் பேரூந்துகள் சென்று வருவதால் அடிக்கடி பழுதாகிறது. இவைகளை உடனே சரி செய்ய ஒரு வருட காலத்திற்கு பழுதுகளை சரி செய்ய தயார் செய்யப்பட்டு உள்ள உத்தேச மதிப்பீட்டு செலவு தொகை ரூ.10,00,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>** –அனுமதிக்கலாம். கோப்பு எண்.1231/2010/இ1

**தீர்மான எண் : 800 – அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் III – ல் யூனிட் III – ல் உள்ள 50 HP மின் மோட்டாரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.38,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.1056/2010/இ2

**தீர்மான எண் : 801 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்கு சொந்தமான கிறிஸ்துநகர் மேல் நிலை நீர் தேக்கத்தின் வெளி பக்கத்திலுள்ள 300 mm சுலீஸ் வால்வு இணைப்பில் பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாவதால் அதனை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரு.12,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். கோப்புஎண்.1166/2010/இ2

**தீர்மான எண் : 802 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.38 குறுந்தெரு , பஜனைமடத்தெரு மற்றும் ஆசாரிமார் வடக்குதெரு ஆகிய பகுதிகளில் 3 '' PVC வினியோக குழாய் பதிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.55,000/– க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு .** – அனுமதிக்கலாம். கோப்பு எண். 957/2010/இ2

**தீர்மான எண் : 803 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சி வார்டு எண்.6 அருகுவிளை கிருஷ்ணன்கோவில் கிராமம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் பொருத்துவதற்கு கடந்த 23.12.2009 – ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எ.பாண்டியன் மதிப்பீட்டைவிட 3.04 % கூடுதல்
2. திரு.றி.வீரமணி, மதிப்பீட்டைவிட 1.26% குறைவு

**அலுவலக குறிப்பு** – 1. நகர்மன்ற தீர்மானம் எண்.539 நாள் 30.10.2009 – ல் செலவினம் ரூ.2,50,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை.விட 1.26 % திரு.றி.வீரமணி குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். ம.எண்.238/2009–2010

**தீர்மான எண் : 804 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி வார்டு எண்.21 வட்டவிளை மாலிக்தினார் நகர் போர்வெல்லில் இருந்து 2 1/4 '' G.I. குடிநீர் குழாய் அமைப்பதற்கு கடந்த 22.12.2009 – ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. திரு.எ.பாண்டியன், மதிப்பீட்டைவிட 3.87 % கூடுதல்
2. திரு.றி.வீரமணி மதிப்பீட்டைவிட 0.24 % குறைவு

**அலுவலக குறிப்பு** – 1. நகர்மன்ற தீர்மானம் எண்554 நாள் 30.10.2009 – ல் செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.24 % குறைவாக திரு.றி.வீரமணி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். ம.எண்.239/2009–2010

**தீர்மான எண் : 805 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 5 இடஙகளிலுள்ள குடிநீர் கழிவறை போர்வெல் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ.10,200/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | **வார்டு எண்.44 தட்டான்விளை விநாயகர் தெருபோர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரை வேக பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.1050/– |
| II | **வார்டு எண்ண்21 இருளப்பபுரம் ரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1,5 குதிரைவேக பேனல் போர்டு ஸ்டார்டர்பழுதுபார்த்து இயக்குதல் | ரூ.1350/– |
| III | **வார்டு எண்.31 உச்சிமாகாளியம்மன் கோவில்தெரு கழிவறை (பொது) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக ஜெட் பம்பு செட் மோட்டார் சக்சன் பைப் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.2700/– |

| | | |
|---|---|---|
| **IV** | **வார்டு எண்.13 நடராஜபுரம் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.1200/— |
| **V** | **வார்டு எண்.13 கல்மடத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக ஜெட் பம்பு செட் மோட்டார் மற்றும் சக்சன்பைப் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.3900/— |
| | மொத்தம் | ரூ.10,200/— |

<u>**அலுவலக குறிப்பு —**</u>அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 806 — அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.44 கீழராமன்புதூர் பாரதி நகர் 7 — வது தெருவில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் பொருத்த கடந்த 22.12.2009 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எ.பாண்டியன், மதிப்பீட்டைவிட (+) 1.94 % கூடுதல்
2. திரு.றி.வீரமணி, மதிப்பீட்டை விட ( — ) 1.29 % குறைவு

<u>**அலுவலக குறிப்பு —**</u> 1. நகர்மன்ற தீர்மான. எண்555 நாள் 30.10.2009 — ல் செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2.குறைந்தஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 1.29 % திரு.றி.வீரமணி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். ம.எண்.240/2009—2010

**தீர்மான எண் : 807 — அனுமதிக்கப்பட்டது.**

11. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 8 இடங்களிலுள்ள குடிநீர் போர்வெல் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவு ரூ55,100/— க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | **.வார்டு எண்.34 தழியபும் தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | பழுதுபட்ட 3 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட்டை எடுத்துவிட்டு 3 குதிரைவேக மாற்று சப்மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் மற்றும் | ரூ.5800/— |
| **I I** | **வார்டு எண்.,2 கேசவதிருப்பாபுரம் ரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | பழுதுபட்ட 3 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட்டை எடுத்துவிட்டு, 7.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் பழுதுபட்ட 2 ‘’ ஜி யை பைப் 12 மீட்டர் மாற்றி புது பைப் இறக்குதல் , ஸ்டார்டர் பழுது பார்த்தல் | ரூ.10600/— |
| **III** | **வார்டு எண்.12 தோப்பு வணிகர் வடக்குத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.7100/— |
| **IV** | **வார்டு எண்..17 தாமரை குளம் தெரு போர்வெல் வாட்டர்சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக பேனல் போர்டு ஸ்டார் பழுதுபார்த்து இயக்குதல் | ரூ.900/— |
| **V** | **வார்டு எண்.19 இளஙகடை புதுத்தெரு போர் வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 1,5 குதிரைவேக சப் மெர்சிபிள்பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 6500/— |
| **VI** | **வார்டு எண்.29 ராஜ் நகர் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 7.5 குதிரைவேக சப் மெர்சிபிள் பம்பு செட் பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 11100/— |
| **VII** | **வார்டு எண் . 40 செட்டித்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (பஜனைமடம் )** | |
| | 1.5 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 6650/— |
| **VIII** | **வார்டு எண்.46 அருள் பிரகாசம் தெரு போர்வெல் வாட்டர்சப்ளை ஸ்கீம்** | |
| | 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | 6450/— |
| | மொத்தம் | 55100/— |

<u>அலுவலக குறிப்பு —</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.1 8130/2009/இ2

**தீர்மான எண் : 808 — அனுமதிக்கப்பட்டது.**

12. இந்நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட 7 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல், கிணறு பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளைசரி செய்யவும், மற்றும் குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைவுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.50,500/— க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **I** | **வார்டு எண்.4 கிரவுண்தெரு போர்வெ. வாட்டர்சப்ளை ஸ்கீம் ( சிவதாணு மண்டபம் பக்கம் )** | |
| | போர் பிளசிங செய்து, 1.5 குதிரைவேக கம்பரசர் பம்பு செட்டை பழுது பார்த்து இயக்குதல் | ரூ.7400/— |
| **I I** | **வார்டு எண்.15 டி.வி.டி.காலனி போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( கே.ஜே.பிள்ளைமண்டபத்தின் பின் பககம் )** | |
| | 1.5 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்பு செட்டின் பைப் உடைத்து போரில் விழுந்துள்ள மோட்டாரைதுாக்கி பழுது பார்த்து இயக்குதல் | ரூ.8000/— |
| **III** | **வார்டு எண்.24 சாலைரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 5 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்பு செட் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.10150/— |
| **IV** | **வார்டு எண்.43 சரலுார் கிணறு வாட்டர் சப்ளை ஸ்கீம்** | |
| | 3 குதிரை வேக ஜெட் பம்பு செட்டின் மோட்டார் சக்சன் பைப் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.3850/— |
| **V** | **வார்டு எண்.46 தளவாய்புரம் ரோஸ் காலனி போர்வெல் வாட்டர்சப்ளை ஸ்கீம்** | |
| | 3 குதிரைவேக ஜெட் பம்பு செட்டின் மோட்டார் சக்சன் பைப் பழுது பார்த்து இயக்குதல் | ரூ.3750/— |
| **VI** | **வார்டு எண்.31 கிருஷ்ணன்கோவில் வெள்ளாளர் மேலத்தெருவில் உள்ள 6 ''PVC பைப் உடைவு சரி செய்து இயக்குதல்** | ரூ.4450/— |
| VII | வார்டு எண்.23 சாலைரோடு இசக்கியம்மன் கோவில் பக்கம் 8 '' ஏ.சி.விநியோக குழாயில் ஏற்பட்டுள்ள உடைவை சரி செய்ய புதிதாக 8'' பைப் லைன் போட்டு சரி செய்து இயக்குதல் | ரூ.12900/— |
| | மொத்தம் | ரூ.50,500/— |

**அலுவலக குறிப்பு —**அனுமதிக்கலாம்.
**தீர்மான எண் : 809 — அனுமதிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சி வார்டு எண்.11 சந்தாமாரியம்மன் கோவில் அருகே ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்னஸ் டேங பொருத்த கடந்த 23.12.2009 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எ.பாண்டியன், மதிப்பீட்டைவிட ( +) 0.28 % கூடுதல்
2. திரு.றி.வீரமணி , மதிப்பீட்டை விட 1.51 % (-). குறைவு

**அலுவலக குறிப்பு —** 1. நகர்மன்றத்தீர்மானம் எண்.541 நாள் 30.10.2009 — ல் செலவினம் ரூ.1,10,000/— க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 1.51 % (-). குறைவாக திரு.றி.வீரமணியின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.241/2009—2010

**தீர்மான எண் : 810 — சாந்தாமாரியம்மன் என்பது சந்தனமாரியம்மன் என்ற திருத்தத்துடன் அனுமதி**க்கப்பட்டது.

14. நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் 16.10.2009 ம் தேதிய கடிதம் எண்.39152/2009/TP3 - ல் இந்திய அரசின் நகர்ப்புற வேலை வாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகமானது தெரு வியாபாரிகளுக்காக ஒரு தேசிய கொள்கையினை வரையறுத்துள்ளதாகவும், தெரு வியாபாரிகளின் வாழ்க்கைத் தொழிலுக்கான வருமானத்திற்கு ஓர் ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும், பொதுவிடங்கள் மற்றும் தெருக்களில் நெருக்கடியின்மை மற்றும் சுகாதார பராமரிப்பினை உறதி செய்தலும் இக்கொள்கையின் மூலம் சாதிக்கப்படுவதற்கு கண்டறியப்பட்ட முதன்மையான நோக்கம் எனவும், இக்கொள்கையின் அடிப்டையில் தீவிர ஆய்வுக்கு பின்னர் தெரு வியாபாரிகளுக்கான வழிகாட்டுதல்களை வழஙகிட அரசு முடிவு செய்துள்ளது எனவும் ஆகவே இதனைஅனைத்து நகரஙகளிலும் நடைமுறைப்படுத்த அரசாணை எண். .(MS) எண்.119 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள் 19.10.2006 –ல் ஆணையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அனைத்து நகரஙகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் வழிகாட்டுதல்களின்படி நெறிமுறைகள் அடஙகிய சட்ட வரைவு ஒன்று தயார் செய்யவும் நகர்மன்ற தலைவரை தலைவராகவும் நகராட்சிஆணையரை உறுப்பினர் செயலராகவும் வருவாய் கோட்டாட்சியரை வருவாய் துறை பிரதிநிதியாகவும் உதவி செயற்பொறியாளரை நெடுஞ்சாலைத்துறை பிரதிநிதியாகவும், காவல்துறை துணை கண்காணிப்பாளரை காவல்துறை பிரதிநிதியாகவும், தெரு வியாபாரிகள் சஙகத்தினரை வியாபாரிகள் பிரதிநிதியாகவும் மாவட்ட முன்னோடி வஙகி மேலாளரை முன்னோடி தேசிய மய வஙகியின் பிரதிநிதியாகவும் கொண்டு நகர விற்பனை குழுவை ( Town vending Committee ) அமைத்திடவும் வியாபாரம் செய்யும் பகுதிகளை ( Hawking Zones) நிர்ணயம் செய்வதற்கும் மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். கோப்பு எண்.17954/2009/எப்.1

**தீர்மான எண் : 811 – பதிவு செய்யப்பட்டது.**

15. இந்நகராட்சிக்குட்பட்டவார்டு எண்.22 – ல் மறவன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள வடக்குதெரு, தெற்கு தெரு, நடுத்தெரு மற்றும் சிறு குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்க 17.12.2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு.எஸ்.ஜோசப் மைக்கேல் ராஜ்
   (–) 10.23 % மதிப்பீட்டைவிட குறைவு

**<u>அலுவலக குறிப்பு–</u>** 1. நகர்மன்றத்தீர்மானம் எண்.383 நாள் 25.09.2009 மதிப்பீடு ரூ.6,50,000/– ற்கு மன்றம் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

2. வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் குரைறந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எஸ்.ஜோசப் மைக்கேல்ராஜ் ( – ) 10.23 % ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி என்றாலும் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்து உள்ளதால் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்ற தாலைவரின் முன் அனுமதியுடன் வேலை உத்திரவு வழஙகியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

ம.எண்.176/2009–2010

**தீர்மான எண் : 812 – ஒப்புக்கொள்ளப்பட்டது.**

16. இந்நகராட்சி மின் விளக்கு பராமரிப்பிற்கு 2010–2011 – ம் ஆண்டிற்கு தேவைப்படும் மின் உபகரணஙகள் வாஙகவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.22.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அனுமதிக்கலாம்,

2. ஒப்பந்தப்புள்ளிகள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் வழி தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்தவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண் : 813 – அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 – ல் கீழ்க்கண்ட மின் இணைப்புகள் உயர் மின் அழுத்தம் காரணமாக அவ்வப்போது பழுதடைந்து விடுவதாக குறிப்பிட்டு அவைகளை தலா இரண்டாக பிரித்து அமைக்க சம்மந்தப்பட்ட வார்டு நகர்மன்ற உறுப்பினரால் கோரப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய மின் கம்பியாளராலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ.எ. | பகிர்மானம் எண். | மின் இணைப்பு எண் | தற்போது உள்ள மின் அளவு |
|---|---|---|---|
| 1 | II | K –11-1344 | 2030 W |
| 2 | IV | J-14-67 | 2940 W |

எனவே மேற்படி மின் இணைப்புகள் தலா இரண்டாக பிரித்து அமைக்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண்.10510/2008/இ4

**தீர்மான எண் : 814 – அனுமதிக்கப்பட்டது.**

18. நாகர்கோவில் நகராட்சிக்கு 2010–2011 – ம் ஆண்டிற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள் பதிவேடுகள், கணனி பொருட்கள், எழுது பொருட்கள், முதலியவைகளை அரசு நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி வாஙகவும், அச்சடிக்கவும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– க்கு ( ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.002210/2010/டி1

**தீர்மான எண் : 815 – அனுமதிக்கப்பட்டது.**

19. இந்நகராட்சி வார்டு எண்.43 சரலூர் மாட்டு சந்தை OHT – ன் கீழ் புறம் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வினியோகம் செய்ய கடந்த 28.01.2010 –ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. திரு.எஸ்.சுப்பையா , மதிப்பீட்டைவிட 0.005 % குறைவு
2. ஐடியல் இஞ்ஜினியரிங ஒர்க்ஸ் மதிப்பீட்டைவிட 5.40 % கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு –</u>**1. நகர்மன்றத்தீர்மானம் எண்.715 நாள் 22.12.2009 செலவினம் ரூ.1,50,000/– க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட திரு.எஸ்.சுப்பையா 0.005 % குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். ம.எண்.281/2009–2010

**தீர்மான எண் : 816 – அனுமதிக்கப்பட்டது.**

20. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 – ல் வெள்ளாளர் கீழத்தெரு மற்றும் குறுக்குத்தெருவில் மெயின் லைன் அமைக்கவும் மற்றும் பேவர் பிளாக் டைல்ஸ் பதிக்கவும் தயார் செய்யப்பட்டு உள்ள உத்தேச மதிப்பீட்டு செலவு தொகை ரூ.2,75,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**அனுமதிக்கலாம். கோப்பு எண்.1337/2010/இ1

**தீர்மான எண் : 817 – அனுமதிக்கப்பட்டது.**

21. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட புல எண்.இ11/9 – 2 ல் தனக்கு பாத்தியப்பட்ட 50 சென்ட் இடத்தில் கிழக்குப்பக்கம் சுற்றுச்சுவரை உடைத்து விட்டு பொது பாதையாக பிரதிவாதிகளான 1) நாகர்கோவில் பெருமாள்குளம் முன்னாள் புரவு இடம் உரிமையாளர்கள் சங்கம் 2) எஸ்..எம்.பீட்டர்பால் 3) சஙகர் 4 ) பொன்முத்து இராஜலிஙகம் செய்திருப்பதை எதிர்த்து திரு.எம்.சிசில் சத்தியதாஸ் மற்றும் ஐரின் சுந்தர்சிங ஆகியோரால் நாகர்கோவில் சப்கோர்ட்டில்அசல் வழக்கு எண்.161/2009 – ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையரை 5 – ம்

பிரதிவதியாக சேர்த்துள்ளார்கள். எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கு செலவுத் தொகைக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு–**</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.1236/2010/எப்.1

**தீர்மான எண் : 818 – அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35 – ல் நாகர்கோவில் கிராமம் ரீ சர்வே எண்..1/123 – ல் அமைந்துள்ள நிலவியல் சந்து (முஸ்லீம் தெரு ) பகுதியில் திரு.மோகன், த/பெ.முத்தையா என்பவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள படிக்கட்டுகளை ( Foot Step ) அகற்றுவதற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு திரு.ஹனீபா, த/பெ.குஞ்சு முகமது என்பவரால் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில் I.A. 1208–2009 – in O.S.No.505/2005 – ன்படி வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் திரு.மோகன், த/பெ.முத்தையா என்பவர் 1 – ம் பிரதிவாதியாகவும், திரு.அப்துல்ரஹீம் த/பெ.சே.முகமது முஸ்தபா என்பவர் 2 – ம் பிரதிவாதியாகவும் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட தெரு திருமதி.பீ.பாத்தும்மாள் பீவி மற்றும் சே.முகமது முஸ்தபா பெயர்களின் பட்டா எண்.6393 – ன் படி நிலவியல் சந்து ( முஸ்லீம்தெரு) என நகராட்சி ' அ ' பதிவேட்டின்படி பதிவாகி உள்ளது. மேற்கண்ட தெருவில் அனைத்து அடிப்படை வசதிகளும் நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பொது தெருவாக பயன்பாட்டில் உள்ளது. நகராட்சியின் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் அமைந்துள்ள தெருவில் ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு ஏதுவாக மேற்கண்ட வழக்கில் நகராட்சி ஆணையரை 3 – ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கும் பொருட்டு impleading petition தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வழக்கில் நகர்மன்ற வழக்கஞர் ஆஜராவதற்கும், வழக்கிடை செலவுகளுக்கும், வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு –.**</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.20529/2009/எப்.1

**தீர்மான எண் : 819 – அனுமதிக்கப்பட்டது.**

23. பொது சுகாதார வாகன எண்.TN 74 – D 2216 – ல் வாகன முன் பக்க

I. Centre Bolt இரண்டு, முன்பக்க வீல் பக்கட் மாற்றி வேலைகள் செய்ய கீழ்கண்டவாறு 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது

II. மேற்படி வாகனத்திற்கு 4 டயர்கள் புதியதாகவாங்க ( டயர் டியூப் பிளாப் உட்பட) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் – 3

| I. | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | மணிமோட்டாஸ் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில் | 1,350/– |
| 2 | கே.எஸ்.எஸ்.ஆட்டோமா பைல்ஸ் | 1.470/– |
| 3 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், புதுக்குடியிருப்பு, நாகர்கோவில் | 1,560/– |
| II.. 1 | அஜந்தா ஏஜென்ஸிஸ், 144எ, நகராட்சி எதிர்புறம் நாகர்கோவில் | 27,920/– |
| 2 | கோல்டன் டயர் ஏஜென்ஸிஸ், 38 பி கோர்ட்ரோடு, நாகர்கோவில் | 28,040/– |
| 3 | பரிமல் ஸ்டோர்ஸ், 6 எ, கேவ்தெரு, நாகர்கோவில். | 28,320/– |

மேற்கண்ட I. , II. – ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் I. – ல் மணிமோட்டார்ஒர்க்ஸ், மற்றும் II – ல் அஜந்தா ஏஜென்ஸி நிறுவனத்தார் ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த புள்ளிகளாகும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

<u>**அலுவலக குறிப்பு**</u> –மணி மோட்டார் ஒர்க்ஸ் மற்றும் அஜெந்தா ஏஜென்ஸீஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 009115/2009/எச்.2

**தீர்மான எண் : 820 – அனுமதிக்கப்பட்டது.**

24. இந்நகராட்சிக்கு சொந்தமான கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்புக்கு தேவையான 2010–2011 – ம் ஆண்டிற்கு 20 டன் ஆலம் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,10,000/– க்கும்மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு</u>** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1058/2010/இ2

**தீர்மான எண் : 821 – அனுமதிக்கப்பட்டது.**

25. இந்நகராட்சிக்கு சொந்தமான கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான பிளீச்சிங பவுடர் 2010 – 2011 – ம் ஆண்டிற்கு பயன்படுத்த தேவையான 25 டன் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,70,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு</u> ––**அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1057/2010/இ2

**தீர்மான எண் : 822 – அனுமதிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் ஆண்டு உரிம இனஙகள் 2009–2010 – க்கு ஏலம் விடப்பட்டு 2010 –2011 – ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு திரு.கே.நடராஜன் மற்றும் திரு.ஜி.சுந்தர் ஆகியோர் தனக்கு உரிமம் வேண்டாம் என 10.02.2010 மற்றும் 15.02.2010 – ல் மனு செய்துள்ளார்கள். எனவே மேற்படி இனஙகள் 01.04.2010 முதல் 31.03.2013 முடிய 3 ஆண்டுகளுக்கு மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ. | இனம் | கால அளவு | ஏல பொறுப்பு தொகை | தேசியமயமாக்கப் பட்ட வங்கி உத்தரவாத சான்று தொகை ரூ | ஒப்பந்த பதிவு கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | அண்ணா மற்றும் வடசேரி பேரூந்து நிலையத்தில் வரும் பேரூந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் உரிமம் | 1.04.2010 முதல் 31.03.2003 முடிய | 5,00,000/– | 10,00,000/– | 30,000/– |
| 2 | கோட்டார்பார உந்து நிலையத்தில் கட்டணம் வசூல் உரிமம் | 1.04.2010 முதல் 31.03.2003 முடிய | 1,00,000/– | 2,00,000/– | 2,500/– |
| | | | | | |

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படின் மேற்படியார்களை பொறுப்பாக்கி தொகை வசூல் செய்யலாம்.
3. அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.16170/2008/அ13

**தீர்மான எண் : 823 – அனுமதிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சிக்கு சொந்தமான.காமராஜ் 5 மாடி கட்டிடத்தில் செயல்பட்டு வந்த கால்நடை பராமரிப்பு துறை இரு அலவலகம் காலி செய்யப்பட்டுள்ளதால் 01.04.2010 முதல் ஏலம் விட மன்றத்தின் ஒப்புதலுக்கு

| வ.எ. | இனம் | கால அளவு | ஏல பொறுப்பு தொகை | தேசியமயமாக்கப் பட்ட வங்கி உத்தரவாத சான்று தொகை ரூ | ஒப்பந்த பதிவு கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | காமராஜ் 5 மாடி கட்டிட 2 – ம் தளம் தெற்கு பெரிய சிறிய அறை | 01.04.2010 முதல் 31.03.2013 முடிய | 50,000/– | 1,00,000/– | 5,000/– |
| 2 | காமராஜ் 5 மாடி கட்டிட 2 – ம் தளம் தெற்கு பெரிய சிறிய அறை | 01.04.2010 முதல் 31.03.2013 முடிய | 50,000/– | 1,00,000/– | 5,000/– |

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்ற மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.002000/2010/அ13

**தீர்மான எண் : 824 – <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

28. இந்நகராட்சி 2009–2010 – ம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3 1– ல் வடக்கு ரதவீதி கலையரங்கம் பக்கம் நியாய விலை கடை அமைக்கும் பணிக்கு 28.01.2010 அன்று மூன்றாவது முறை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

1. திரு.வி.ஐயப்ப குமார்
   (–) 0.43 % மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.சி.குமார்
   (+) 22.32 % மதிப்பீட்டை விட கூடுதல்

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.வி.ஐயப்பகுமார், (–) 0.43 % மதிப்பீட்டை விட குறைவு கொடுத்துள்ளதை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2. திட்டப்பணியினை விரைவாக முடிப்பதன் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி செய்ய வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் கடித எண்.அ3/1469/09 நாள் 10.11.2009 – ல் ரூபாய் .2.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ம.எண்.126/2009–2010

**தீர்மான எண் : 825 – <u>ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>**

29. இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் கசிவு வாகனத்தில் தீவீர வரி வசூல் முனைப்பு திட்டத்தின் கீழ். வரி வசூலினை தீவிரபடுத்தும் பொருட்டு நடமாடும் வரி வசூல் வாகனமாக தற்காலிகமாக செயல்படுத்தும் பொருட்டு ஓர் எண்.3 G இணைப்பு பி.எஸ்.என்.எல்.நிறுவனத்திலிருந்து பெறவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** –1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி 3 G இணைப்பு பெற நடடிவக்கை எடுக்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.2265/2010/இ3

**தீர்மான எண் : 826 – அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சி பகுதியில் நடமாடும் கணணிவரி வசூல் மையம் செயல்படுத்த Broad band connection – பி.எஸ்.என்.எல். மூலம் பெறுவதற்கு தற்போது ரூ.1040/– செலுத்தவும் , மாதந்தோறும் ரூ.6400/– வீதம் செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் அலுவலக பொறியாளர் அறை மற்றும் ஆணையர் அறைகளுக்கு broad band internet connection பி.எஸ்.என்.எல் மூலம் பெறுவதற்கு Modem Charge ரூ.1040/– மற்றும் plan charge ரூ.250/– மொத்தம் ரூ1290/– வீதம் இரண்டிற்கும் ரூ.2580/– செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியத்தை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.14453/2008/இ3

**தீர்மான எண் : 827 – அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சி வார்டு எண்.4 கிரௌண்தெரு, சிவதாணு மண்டபம் அருகில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வினியோகம் செய்யவும் அதற்காகும் செலவினம் ரூ.2,50,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம். கோப்பு எண்.1309/2010/இ2

**தீர்மான எண் : 828 – அனுமதிக்கப்பட்டது.**

32. இந்நநராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேரூந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு புதிதாக குடிநீர் இணைப்பு வழஙகவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.13,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு –</u>** 1. அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மன்றத்தலைவரின்முன்அனுமதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.124/2010/இ2

**தீர்மான எண் : 829 – அனுமதிக்கப்பட்டது.**

33. நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.39618/2009/LA 3 , நாள் 29.01.2010 – ன் படி GAP Filling Fund – 2009–2010 – ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூந்து நிலையத்தினை மேம்பாடுசெய்தல் பணிக்கு ரு.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையுடன் நகராட்சி பொது நிதி ரூ.25.00 இலட்சம் சேர்த்து மொத்தம் 125.00 இலட்சத்திற்கு மேற்படி பேரூந்து நிலைய அபிவிருத்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**அனுமதிக்கலாம். கோப்பு எண்.2695/2010/இ3

**தீர்மான எண் : 830 – அனுமதிக்கப்பட்டது.**

34. இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நியூ டெல்லி அவர்களது திருத்தப்பட்ட. அறிவிப்பு எஸ்.ஒ.705 (எப்) நாள் 02.09.99 – ன் படி பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் விதிகள் 1999 உருவாக்கப்பட்டு பிளாஸ்டிக்ஸ் பொருட்களின் பயன்பாடு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல் ) விதிகள் 2000 – ன் படி திடக்கழிவுகளைக்கையாளுதல் மற்றும் மேலாண்மை ஆகியவை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நகராட்சித் திடக்கழிவுகள் ( மேலாண்மை மற்றும் கையாளுதல் ) விதிகள் 2000 – ன் அட்டவணை II வரிசை எண். 1 ( 3 ) ன் படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும்

பொறுப்புடையவராவார். அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணஙக கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவர்.

இவற்றை செயல்படுத்தவும், நகரில் சாக்கடை திட்டம் தஙகு தடையின்றி அமைக்கப்பட்டு செயல்படவும் சுற்றப்புற சூழ்நிலை பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதாரம் சீர்கேடு இல்லாமல் இருக்கும் பொருட்டும் மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல் விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் இந்நகரில் வரைமுறைபடுத்தப்படுகின்றது. எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிளாஸ்டிக்ஸ் விற்பனையாளர்கள் விற்பனை செய்யவும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பிளாஸ்டிக்ஸ் பயன்படுத்தவும் இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| 1 | எந்த ஒரு பிளாஸ்டிக் தூக்குப்பையும் அளவில் 8 இஞ்ச் x 12 இஞ்ச் அளவுக்கு குறைவில்லாததாகவும், தடிமனில் 20 மைக்ரான் அளவிற்கு குறைவில்லாததாகவும் இருத்தல் வேண்டும். |
| | குறிப்பு : இதற்கு விளக்கமாக மேற்கண்ட 8 இஞ்ச் அகலம் மற்றும் 12 இஞ்ச் உயரமும் கொண்ட 50 தூக்குப்பைகளின் எடையானது 105 கிராமாகவோ அல்லது அதில் 5 % கூடுதலாகவோ அல்லது 5 % குறைவாகவோ மட்டுமே இருக்கவேண்டும். |
| 2 | எந்தவொரு விற்பனையாளரும் மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பைகள் அல்லது பிளாஸ்டிக் கவர்களில் அல்லது பிளாஸ்டிக் கொள்கலனில் ( Container ) உணவுப் பொருட்களை சேமிக்கவோ, கொண்டு செல்லவோ, விற்பனை செய்யவோ அல்லது கட்டிக் கொடுக்கவோ கூடாது. |
| 3 | .மேலும் தேநீர் மற்றும் பிற சூடான மற்றும் சாதாரண அல்லது குளிரான பானஙகளை ஒரு முறை பயன்படுத்தப்பட்டு பின்பு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்ஸ் கோப்பைகள் அல்லது பிளாஸ்டிக்ஸ் கப்புகள் அல்லது பிளாஸ்டிக் கொள்கலனை மொத்தமாக விற்பனை செய்வதோ அல்லது சில்லறையாக விற்பனை செய்வதோ அல்லது உபயோகிப்பதோ கூடாது |
| 4 | உணவு பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளை கட்டுவதற்கோ அல்லது பரிமாறுவதற்கோ, புதிய அல்லது மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக்ஸ் தட்டுகளையோ அல்லது பிளாஸ்டிக்ஸ் விரிப்புகளையோ மொத்தமாக விற்பனை செய்யவோஅல்லது சில்லறையாக விற்பனை செய்வதோ அல்லது உபயோகிப்பதோ கூடாது. |
| 5 | திடக்கழிவுகளிலுள்ள பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை தனியாகப் பிரித்து நாகர்கோவில் நகராட்சியினால் அறிவிக்கப்பட்ட நேரத்தில் சுகாதாரப் பணியாளரிடம் நேரிடையாக ஒப்படைக்க வேண்டும். |

மேற்கண்ட நிபந்தனைகளை மீறி நாகர்கோவில் நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக்ஸ் தூக்குப்பைகள், பிளாஸ்டிக்ஸ் கப்புகள், பிளாஸ்டிக்ஸ் விரிப்புகள் முதலியவற்றை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்பவருக்கும் அவற்றை உபயோகிப்பவர்களுக்கும், பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை தனியாக பிரித்தெடுத்து ஒப்படைக்காத தனி நபர் அல்லது வீடு அல்லது நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுவதுடன் அந்த வியாபாரியிடம் உள்ள மறு சுழற்சி செய்யமுடியாத அனைத்து பிளாஸ்டிக்ஸ் பறிமுதல் செய்யப்படும்.

<u>**இவ் உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகின்றது.**</u>

மொத்த விற்பனையாளருக்கு அபராதம் – ரூ.1000/–
சில்லறை வியாபாரிகளுக்கு அபராதம் – ரூ.500/–
உபயோகிப்பவர்களுக்கு அபராதம் – ரூ.100/–
பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத நிறுவனஙகள் – ரூ.100/–
பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத தனி நபர்/வீடுகள் – ரூ.25
வசூலிக்கப்படும் அபராத தொகை நாகர்கோவில் நகராட்சியின் 1045 கணக்கில் வைக்கப்படும்

பறிமுதல் செய்யப்படும் பிளாஸ்டிக்ஸ் பைகள் உடனடியாக வெட்டப்பட்டோ அல்லது கிழிக்கப்பட்டோ நாகர்கோவில் நகராட்சியின் அலுவலகத்திலோ அல்லது திடக்கழிவு மேலாண்மை உரக்கிடஙகிலோ சேமிக்கப்பட்டு இறுதியாக சிமெண்ட் ஆலைகள் ஊடு எரிபொருளாக பயன்படுத்த அனுப்பி வைக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய அரசின் சட்டத்தினை மீறுபவர்கள் மீது சுற்றுச்சுழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 , விதி 15 – ன் படி அபராதத்துடன் கூடிய சிறைத்தண்டனை வழஙகவும் தொடர்ந்து மீறினால் நாளொன்றுக்கு ரூ.5000/– வரை அபராதம் விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 313 C – ன்படி அபராதம் விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்அவர்களின் ந.க.எண்.379/2010/சி1 நாள் 22.01.2010 – ன் படி கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

| | |
|---|---|
| 1 | பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுக்கும் பணியை வீடுகளிலிருந்தும் வணிக வளாகஙகளிலிருந்தும், திருமண மண்டபஙகளிலிருந்தும் மற்றும் கல்வி நிறுவனஙகளிலிருந்தும் தொடஙக வேண்டும். |
| 2 | பிரித்தெடுத்த பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்து வைக்க உரிய பகுதியை தேர்ந்தெடுக்க வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்து வைக்கும் பணியினை தனியார் மூலம் செயல்படுத்தும் பட்சத்தில் அதற்கென பொதுவான சேகரிப்பு /சேமிப்பு இடத்தை தேர்வு செய்யவேண்டும். |
| 3 | சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்லும் முன் அனைத்து பிளாஸ்டிக் கழிவுகளையும் நன்றாக அழுத்தி சுருக்கம் செய்ய வேண்டும் |
| 4 | பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு செல்ல உள்ளாட்சி அமைப்பு உரிய ஏற்பாடுகளை செய்யவேண்டும். |
| 5 | பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் பிரித்தெடுத்தல் குறித்தான விழிப்புணர்வு முகாம்களை ஒருஙகிணைத்து பஙகேற்க வேண்டும். |
| 6 | குப்பை பொறுக்குவோர் பேப்பர் கழிவுகளை வணிகம் செய்வோர் ஆகியவர்களை தேர்வு செய்து தூக்கி எறியும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்தல் மற்றும் சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு செல்லுதல் ஆகிய செயல்களுக்கு பயன்படுத்தலாம். |
| 7 | பிளாாஸடிக் கழிவுகளை பிரித்தெடுத்தல் மற்றும் நன்றாக அழுத்தி சுருக்கம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்க முறைய்ான பயிற்சிகள் தரப்படவேண்டும். |
| 8 | பிளாஸ்டிக் கழிவுகளை வெளியேற்றம் செய்வதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் ஆணை பெற வேண்டும். |
| 9 | இந்தியா சிமெண்ட் லிமிடெட் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

எனவே நாகர்கோவில் நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக்ஸ் பொருட்களை தடை செய்யவும் அதனை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் அறிவுரைகளை பின்பற்றவும் மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய ஒப்புதலுடன் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் திருநெல்வேலிக்கு அனுப்பவும் மற்றும் அந்நிறுவனத்தடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு – ம</u>**ன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.18506/2009//எச்.3

**தீர்மான எண் : 831 – அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சி 2008–2009 – ம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வார்டு எண்.30, புதுக்குடியிருப்பு சத்தியநேசன் வாசிப்பு சாலை பழைய கட்டிடத்தை மாற்றி மேல் மாடியின் புதிய கட்டிடம் கட்டுதல் பணிக்கு ரூ.5.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்று வரும் நிலையில் தற்போது கூடுதலாக ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் ரூ.7.50 இலட்சத்திற்கு மாவ.ட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் செயல்முறை எண்.ஆ3/3233/2008, நாள் 01.02.2010 – ன் படி திருத்திய நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணி நடைபெற்று வருவதால் திருத்திய மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கும் ஏற்கனவே பணி செய்து வரும் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம். கோப்புஎண்.10937/2009/இ1

**தீர்மான எண் : 832 – அனுமதிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 – ல் கீழசரக்கல்விளை பகுதியில் KSFI – 3 மின்கம்பம் தெருவின் நடுவே அமைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடைடயூறாக அமைந்துள்ளது. எனவே மேற்படி மின் கம்பத்தை மாற்றி அமைக்கவும், அதற்கான மின் வாரிய கேட்பு தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3759/2007/இ4

**தீர்மான எண் : 833 – அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகரா ட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 – ல் சாஸ்தா நகர் மற்றும் ராஜபாதை பகுதிகளில் அமைந்துள்ள மின் கம்பஙகள் EK II F I 37 மற்றும் EI FI 34 பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதால் மேற்படி மின்கம்பஙகள் மாற்றி அமைக்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.15444/2009/இ4

**தீர்மான எண் : 834 – அனுமதிக்கப்பட்டது.**

38. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50 – ல் மாதர் சஙக ரோடு குறுக்கு தெருவின் நடுவில் மின்கம்பம் எண்.184 B பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் மேற்படி மின் கம்பத்தினை மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி மின் கம்பத்தினை மாற்றி அமைக்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5711/2007/இ4

**தீர்மான எண் : 835 – அனுமதிக்கப்பட்டது.**

39. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 – ல் தளவாய் தெருவில் சுமார் 75 மீட்டர் நீளத்திற்கு பள்ளமாக உள்ளது. மழை காலஙகளில் தண்ணீர் தேஙகி பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால் அதனை சரி செய்ய , தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு செலவு தொகை ரூ.2,00,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.18037/2009/இ1

**தீர்மான எண் : 836 – அனுமதிக்கப்பட்டது.**

40. இந்கராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருஙகிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் 2008–2009 – ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.56503/2009/IHSDP-1 நாள் 23.01.2010 – ல் நகராட்சிக்கு வரப்பெற வேண்டிய II nd Instalment Claim Certificate , பயனீட்டு ச்ான்று மேற்படி கட்டப்பட்டு வரும் வீடுகளில் பல்வேறு நிலைகளின் போட்டோ, வீடியோ ( C.D.) ஆல்பம், Book let ) ஜெராக்ஸ் எடுத்தமைக்கும் மேலும் திருந்திய விரிவாக திட்ட அறிக்கை ( Revise Detail Project Report ) தயார் செய்ததற்கும் செலவு தொகை ரூ.44,006/– இந்நகராட்சி உதவி பொறியாளர்கள் மூலம் செலவு செய்யப்பட்டமைக்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

**அலுவலக குறிப்பு** –1. அவசர அவசியம் கருதி இந்நகராட்சி உதவி பொறியாளர் திருமதி.வே.கிரேஸ் அன்ன பெர்லி அவர்கள் மூலம் செலவு செய்யப்பட்டமைக்கு மேற்படியாருக்கு மேற்படி தொகை ம.ன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.6040/2006/இ1

**தீர்மான எண் : 837 – அனுமதிக்கப்பட்டது.**

41. நாகர்கோவில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் கீழ்க்கண்ட விரப்படியான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி சம்மந்தமாக வெளியூர் சென்று வந்தமைக்கு கீழ்க்கண்டவாறு பயணப்படி தொகை வழஙக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எ. | பெயர் மற்றும் பதவி<br>திருவாளர்கள்/திருமதி | பயணம் மேற்கொண்ட இடம் | பயணப்படித் தொகை<br>ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமதி.பு.ஜானகி இரவீந்திரன்,<br>ஆணையர் | சென்னை<br>7,9,10,11/09 | 18,700 |
| 2 | மரு.போஸ்கோ ராஜா,<br>நகர் நல அலுவலர் | சென்னை<br>1/2010 | 1735/– |
| 3 | எம்.இராமச்சந்திரன், கணக்கர் | மதுரை | 1215/– |
| 4 | எம்.விஜயன், உதவியாளர் | மதுரை, சென்னை | 6240/– |
| 5 | பி.நஙகையர்மணி, உதவி திட்ட அமைப்பாளர் | தென்காசி, சென்னை, திருநெல்வேலி | 5601/– |
| 6 | பி.கிருஷ்ணகுமார், நகரமைப்பு ஆய்வர் | சென்னை | 2534/– |
| 7 | எம்.,கிஷோர், இளநிலை உதவியாளர் | சென்னை | 1866/– |
| 8 | எஸ்.ராஜா, துப்புரவு ஆய்வாளர் | மதுரை, சஙகரன்கோவில் | 788/– |
| 9 | றி.பிரேமா, இளநிலை உதவியாளர் | திருநெல்வேலி | 534/– |
| 10 | அ.சதானந்தன், இ.நி.உ. | மதுரை | 354/– |
| 11 | ஆர்.நாகராஜன், வேலை ஆய்வர் | மதுரை | 1060/– |
| 12 | பி.பிச்சை, என்.எம்.ஆர் | திருநெல்வேலி | 760/– |
| 13 | பி.ஞானப்பா, இளநிலை உதவியாளர் | கோயம்புத்தூர் | 12012/– |
| | | மொத்தம் | 53405/– |

<u>அலுவலக குறிப்பு –</u> மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.4723/2007/பி1

**தீர்மான எண் : 838 – அனுமதிக்கப்பட்டது.**